DE–1/2023/3 

**DEPARTMENTAL TESTS — JANUARY 2023**

**[Translation from Tamil to Malayalam]**

[Time : 45 Minutes

(Maximum : 100 marks)

1. மலையாளத்தில் மொழிபெயர்க்கவும்.

தற்கால அறிவியல் உலகில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கின்ற சாதனமாகத் தொலைக்காட்சி திகழ்கிறது. எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னால் தகவல் தொடர்பில் செவிப்புலத்திறன் குறைந்து வாய்மொழித்திறன் மிகுந்தது. ஆனால் காலத்தையும் தூரத்தையும் வென்றுவிட்ட சாதனமாகத் தொலைக்காட்சி வந்து உதித்த போது மாபெரும் உலகமே குக்கிராமமாக மாறிவிட்டது. இந்த மாற்றத்திற்கு வித்திட்டவர் "பெயர்டு" என்பவராவார். தமது சோதனையில் வெற்றி கண்ட இவர் 1926 சனவரி மாதம் 27 ஆம் நாளில் தமது கருவியை, புகழ்பெற்ற அறிஞர்கள் மத்தியில் இயக்கிக் காட்டினார். இத்துறையில் பலரும் தொடர்ந்து ஈடுபட்டதன் விளைவாக 1936 இல் இங்கிலாந்தில் தொலைக்காட்சி வழி தகவல் ஒளிபரப்பு நடைமுறைக்கு வந்தது. 1953 முதற்கொண்டே வண்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பைத் துவங்கிய முதல் நாடு என்ற பெருமையை அமெரிக்கா பெற்றது.

இந்தியாவில் முதன்முதலாக யுனெஸ்கோ ஆதரவுடனும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியுடனும் 1959 அக்டோபர் 15 ஆம் நாள் புதுடெல்லி நிலையத்திலிருந்து தொலைக்காட்சி ஒளிபரப்புத் தொடங்கியது. தொடக்க காலத்தில் வாரம் இருநாட்களும், ஒவ்வொரு நாளும் இருபது நிமிடங்களும் நிகழ்ச்சிகள் 40 கி.மீ சுற்று வட்டாரத்திற்கு மட்டும் தெரியும் திறன் கொண்டிருந்தன. முதலில் சமுதாய மேம்பாட்டு நிகழ்ச்சிகளை அளித்து வந்த அரசு, பிற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்க முடிவு செய்தது.